**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்**

**முதலாம் தவணைப் பரீட்சை – 2020**

**தரம் - 6** **புவியியல்** **இரண்டு மணித்தியாலம்**

சுட்டெண்:…………..……..

## பகுதி I

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

- **கீழே தரப்பட்டுள்ள 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களிற்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

1) பாடசாலை அமைந்துள்ள மிகச்சிறிய நிர்வாக அலகு எது?
1.கிராம உத்தியோகத்தர் பிரிவு 2. பிரதேசசெயலாளர் பிரிவு
3. மாவட்டம் 4. மாகாணம்

2) சூரியன் மறையும் திசையைப் பார்த்து இரு கைகளையும் இரண்டு பக்கம் நீட்டிநிற்கும் போது உங்கள் வலது கை எத் திசையைக் காட்டி நிற்கின்றது.
1.வடக்கு 2. கிழக்கு 3. மேற்கு 4. தேற்கு

3) யா/ மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, மானிப்பாய், யாழ்ப்பாணம் என்ற பாடசாலையின் பெயரிலுள்ள 'யா' என்ற எழுத்து எதனைக் குறித்து நிற்கின்றது?
1.மாகாணம் 2. மாவட்டம் 3. கல்வி வலயம் 4. கல்வி கோட்டம்

4) இலங்கையின் தென்மாகாணத்திலுள்ள மாவட்டங்களில் ஒன்று.
1.மாத்தளை 2. களுத்துறை 3. மாத்தறை 4. அம்பாறை

5) வானிலை மூலகங்களில் மிகவும் பிரதானமானது எது?
1.வெப்பநிலை 2. மழைவீழ்ச்சி 3. காற்று 4. வளியமுக்கம்

- **6 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையாயின் (✓) எனவும் பிழையான விடையாயின் (X) எனவும் புள்ளிக் கோட்டில் அடையாளமிடுக.**

6) மீனவர்களும், விவசாயிகளும் வானிலை பற்றிய தகவலை அறிந்து செயற்படுவது மிக அவசியமாகும். (…….)
7) இலங்கையில் எட்டு மாகாணங்கள் அமைந்துள்ளன. (…….)
8) மழைவருமுன் வானத்தில் இருள் சூழ்ந்த தடித்த முகில்களை அவதானிக்க முடியும்(…….)
9) அதிக வேகமாக வீசும் காற்று மென் காற்று எனப்படும். (…….)

10) புராதன கால மக்கள் சூரியன் மூலம் திசையை அறிந்து கொண்டனர். (.......)

- **10 தொடக்கம் 15 வரையான வினாக்களை மிகவும் நெருங்கிய தொடர்புகளின் அடிப்படையில் 'அ' நிரலில் உள்ளவற்றை 'ஆ' நிரலுடன் தொடர்பு படுத்துக**

| (அ) | (ஆ) |
|---|---|
| 11) திருகோணமலை | மத்தியமலைநாடு |
| 12) வெப்பமானி | கிழக்குமாகாணம் |
| 13) நுவரேலியா | 25 |
| 14) பாடசாலைத்திட்டப்படம் | வெப்பநிலை |
| 15) மாவட்டங்கள் | வடக்குத்திசை |

- **16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

16) உமது பாடசாலை ..................................... சூழலில் அமைந்துள்ளது.

17) சூழலில் உள்ள மண்ணை ......................................... பண்படுத்துகின்றது.

18) எமது சூழலில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியை ................ அலகினால் அளக்கின்றனர்.

19) நீர் நிலைகளில் உள்ள நீரானது .............................. மூலம் வளிமண்டலத்தைச் சென்றடைகின்றது.

20) எமது நாடான இலங்கை ............................... சமுத்திரத்தில் அமைந்துள்ளது.

(20X2= 40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

1. பாடசாலையில் முதலாம் தவணைக்காக வழுங்கப்பட்ட கணிப்பீட்டுச் செயற்பாடு உமக்கு வழங்கப்படுகின்றது. இச் செயற்பாடு நாம் வாழும் வடமாகாணச்சூழலை அறிந்து கொள்வதற்காகும். இதில் இலக்கம் இரண்டு(2) வடமாகாணக் கல்வித்திணைக்களம் அமைந்துள்ள இடத்தைக் குறிக்கின்றது. இதனைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக




- **i தொடக்கம் v வரையான வினாக்களுக்கு வடமாகாணப்படத்தைப் பயன்படுத்தி வெற்றிடத்தை நிரப்புக**

  i. வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு ……………….திசையில் திருக்கேதீச்சரம் சிவன் கோவில் அமைந்துள்ளது.

  ii. வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு ………………….. திசையில் நகுலேஸ்வரம் சிவன் கோவில் அமைந்துள்ளது

  iii. நல்லூர் முருகன் கோவிலுக்கு அருகே வடக்கில் கல்வியை வளர்க்கும் உயர் நிறுவனமான ………………………………………….. அமைந்துள்ளது

  iv. வற்றாப்பளை அம்மன் கோவிலில் இருந்து நோக்கும் போது ………………….. திசையில் வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் அமைந்துள்ளது.

  v. நயினாதீவு அம்மன் கோவிலுக்கு ………………… திசையில் வற்றாப்பளை அம்மன் கோவில் அமைந்துள்ளது.

  vi. வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்திற்கு ………….. திசையில் வேலணைத் தீவு அமைந்துள்ளது

  vii. நகுலேஸ்வரம் சிவன் கோவிலுக்கு தெற்கே ………………. சிவன் கோவில் அமைந்துள்ளது

(7புள்ளிகள்)

- **vi தொடக்கம் x வரை வடமாகாணத்துக்குரிய மாவட்டங்களின் நகரங்கள் தரப்பட்டுள்ளது அவற்றுக்குரிய இலக்கத்தை புள்ளிக் கோட்டில் இடுக**

  viii. யாழ்ப்பாணம் (……...)

  ix. கிளிநொச்சி (……...)

  x. முல்லைத்தீவு (……...)

  xi. மன்னார் (……...)

  xii. வவுனியா (……...) (5புள்ளிகள்)

2.

i. உமது பாடசாலை அமைந்துள்ள பின்வரும் நிர்வாகப்பிரிவுகளைத் தருக.

a) கிராமஉத்தியோகத்தர் பிரிவு :-…………………………………….

b) பிரதேசசெயலாளர் பிரிவு :-…………………………………….

c) மாவட்டம் :-…………………………………….

(3புள்ளிகள்)

ii. உமது பாடசாலை அமைந்துள்ள பின்வரும் கல்வி நிர்வாகப்பிரிவுகளைத் தருக.

a) கோட்டம் :-………………………………..

b) வலயம் :-……………………………….

c) மாகாணம் :-……………………………….

(3புள்ளிகள்)

iii. பின்வரும் நிர்வாகப் பிரிவுகள் ஒன்றிணைவதனால் உருவாகும் நிர்வாகப்பிரிவுகளைத் தருக.

a) கிராமஉத்தியோக்த்தர் பிரிவு பல ஒன்றிணைவதால் உருவாகும் நிர்வாகப்பிரிவு எது?

b) பிரதேசசெயலாளர் பிரிவு பல ஒன்றிணைவதால் உருவாகும் நிர்வாகப்பிரிவு எது?

c) மாவட்ட செயலாளர் பிரிவு பல ஒன்றிணைவதால் உருவாகும் நிர்வாகப்பிரிவு எது?

(3புள்ளிகள்)

iv. உமது பாடசாலை சூழல் தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

a) உமது பாடசாலைக்கு வடக்கே அமைந்திருப்பது எது?

b) உமது பாடசாலைக்கு அருகில் உள்ள நகரம் எது?

c) உமது பாடசாலையின் திசையை அறிய பயன் படுத்தப்பட்ட கருவி எது?

(3புள்ளிகள்)

3. இன்று முற்பகல் 9.00 மணியுடன் முடிவடைந்த 24மணித்தியாலத்திற்குள் 300 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி மாங்குளத்திலும், 40$^{o}$ C உயர் வெப்பநிலை மறிச்சுக்கட்டியிலும் , குறைந்த வெப்பநிலை 13$^{o}$ C நுவரேலியாவிலும் பதிவாகியுள்ளது. வடகிழக்குத்திசையில் காற்று வீசுவதனால் எதிர் வரும் 24 மணித்தியாலங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிக்கு கடும் மழைகிடைக்கும். என கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது

i.

a) மேலே கூறப்பட்ட அறிக்கையை எவ்வாறு அழைப்பர்?

b) மேலே கூறப்பட்ட அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

c) அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?

(3புள்ளிகள்)

ii. மேலே கூறப்பட்ட அறிக்கையில் இனங்காணக்கூடிய மூன்று வானிலை மூலகங்களைத் தருக.

(3புள்ளிகள்)

iii.

a) கூடுதலாகப் பதிவாகியுள்ள மழைவீழ்ச்சி எவ்வளவு?

b) உயர் வெப்பநிலை பதிவாகியுள்ள இடம் எது?

c) அறிக்கையில் எதிர்வு கூறப்பட்ட விடயம் யாது?

(3புள்ளிகள்)

iv. இவ் அறிக்கையை மக்களுக்கு தெரிவிக்கும் மூன்று ஊடகங்களைத் தருக.

(3புள்ளிகள்)

4.

i. வானிலை பற்றிய தகவலை உடனுக்குடன் அறிந்து செயற்பட வேண்டியவர்கள் மூவரைத் தருக.

(3புள்ளிகள்)

ii. வானிலை மூலகங்களில் ஏற்படும் பாரிய மாற்றங்களினால் தோன்றும் இயற்கை அனர்த்தங்கள் மூன்று தருக.

(3புள்ளிகள்)

iii. குளிர்ச்சியான மென் காற்றை உணரக்கூடிய இடங்கள் மூன்று தருக?

(3புள்ளிகள்)

iv. மழைவீழ்ச்சி, காற்றின்திசை, காற்றின் வேகம் என்பவற்றை அளவிடக்கூடிய கருவிகளின் பெயரை முறையே தருக.

(3புள்ளிகள்)

5.

i. உமது பாடசாலையின் அயற்சூழலில் அமைந்துள்ள பௌதிக அம்சங்கள் மூன்று குறிப்பிடுக.

(3புள்ளிகள்)

ii. உமது பாடசாலையின் அயற்சூழலில் அமைந்துள்ள மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சங்கள் மூன்று குறிப்பிடுக.

(3புள்ளிகள்)

iii. மழைவீழ்ச்சியினால் கிடைக்கும் நன்மைகள் மூன்று குறிப்பிடுக.

(3புள்ளிகள்)

iv. பாடசாலை மற்றும் வீட்டுச் சூழலில் மரங்களை நாட்டும்போது எந்த மூன்று விடயங்களைக் கருத்தில் கொண்டு மரங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(3புள்ளிகள்)

6.

i. தாவரங்களினால் மனிதனுக்குக் கிடைக்கும் மூன்று நன்மைகள் குறிப்பிடுக. .

(3புள்ளிகள்)

ii. உமது பாடசாலை, வீட்டுச்சூழல் மாசடையும் வழிகள் மூன்று குறிப்பிடுக.

(3புள்ளிகள்)

iii. உமது சூழலில் காணப்படும் விலங்குகளினால் மனிதனுக்கு ஏற்படும் தீமைகள் மூன்று தருக.

(3புள்ளிகள்)

iv. இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களையும் குறிப்பிடுக. .

(3புள்ளிகள்)